Potato cold storage in Hosur taluk.

*361 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to construct a cold storage to preserve seed potatoes in Hosur taluk; and

(b) if so, when it will be constructed ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:

(அ) உருளைக்கிழங்குகளைப் பாதுகாப்பதற்கான குளிர்ப்பதனசாலை ஒன்றை ஹோசூர் வட்டத்தில் நிறுவுவதற்கான செயற்குறிப்பு எதுமில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : In the matter of potato cultivation, next to Nilgiris, Hosur takes the second place. There are a good number of cultivators of this vegetable. This is a delicate vegetable and gets rotten within a few days unless preserved in cold storage. The District Agricultural Officer is of the opinion that a cold storage plant is wanted there. The cultivators want it. Under these circumstances, will the Government be pleased to sanction a cold-storage plant for this taluk ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசிலனை செய்யலாம்.

கதர்

*362 **வினா—திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1966–67-ம் ஆண்டிலும், 1967–68-ம் ஆண்டிலும் கதர் விற்பனை முறையே எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

1966–67-ல் ரூ. 202·91 லட்சம்.

1967–68-ல் ரூ. 208·57 லட்சம்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, இந்தக் கதர் விற்பனையில் சில குறிப்பிட்ட நேரங்களிலே தான் ரிபேட் கொடுக்கப்படுகிறது. எப்பொழுதுமே ரிபேட் கொடுத்தால் விற்பனை அதிகமாகும் என்பதைப் பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அகில இந்திய ரீதியில் கிராமக் கைத்தொழில் ஆணைக் குழுவின் பரிந்துரைகளின்படி அவர்கள் கொடுக்கும் நிதியைப் பொறுத்துச் செய்யப்படுகிறது. ஆகவே, ஆண்டு முழுவதும் ரிபேட் கொடுப்பதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவரவர்களே, எந்த மாவட்டத்திலே அதிகமாக கதர் விற்பனையாகியுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் வட்டத்திலே அதிகமாக விற்பனையாகியிருப்பது தெரிகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1969 மார்ச் 17]

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, 1966-67, 1967-68 ஆண்டுகளில் தமிழகத்தில விற்கப்பட்ட கதர் அனைத்தும் தமிழகத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டதா ? அல்லது வடநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்டு அது விற்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கதருக்குத் தேவையான சில பட்டு ரகங்கள், நூல்கள் வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கப்பட்டு, நாமாக நெசவு செய்து விற்கப்பட்டதுதான்.

***363 வினு—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கதர் நெய்கின்ற கைத்தறியாளருக்கு கூலி உயர்வு கொடுக்க சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது, எவ்வளவு உயர்த்தப்படும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்தக் கதர் நெய்கின்ற தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு கொடுப்பது பற்றி கேட்ட கேள்வி ரொம்ப நாட்களுக்கு முன்பு கேட்கப்பட்டது. ஆனால், அதற்குப்பின்னாலே அந்தக் கதர் நெய்கின்ற தொழிலாளர்களுக்கு நூல் நூற்கின்ற பஞ்சு கொடுப்பதில்லை. நெய்கின்ற நூல் கிடைக்காமல் 6 மாதங்களாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அவர்களுக்கு மீண்டும் பஞ்சு நூலைக் கொடுத்து மீண்டும் அவர்களது வேலைக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: புதிய அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலே சிலபல இடங்களில் கதர் வாங்கிக்கொள்ள வில்லை. தங்களுக்குக் கட்டிவரவில்லை என்று சொல்லிவிட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், நம்முடைய டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் அணிவதன் மூலம் அது கிழிந்துவிடும் என்று இருந்தது. அதனால் அவர்களது வேண்டுகோளையேற்று விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதனால், அப்படி உற்பத்தியாகும் துணியைச் செலவழிக்க முடியாது என்று கருதி, தேக்கம் ஏற்பட்டுவிடும் என்று கருதி சிலபல இடங்களில் நிறுத்தப்பட்டது. இன்னும் சில இடங்களில் நஷ்டம் அதிகம் ஏற்பட்டது என்பதனால் நிறுத்தப்பட்டது. இப்பொழுது சீராக்கப்பட்டு பெரும்பாலும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு உற்பத்தி அதிக மாகி விற்பனையும் அதிகமாகி இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, கதர் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் அதிகம் வருகின்ற வகையில், சென்ற 1966-67-ம ஆண்டைவிட, காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு புதிய ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் 6 லட்சம் ரூபாய் அதிகமாக விற்பனை செய்யப் பட்டிருக்கிறது என்று விபரங்கள் தரப்பட்டன. எந்த அடிப்படையில் இப்படி விற்பனை அதிகமாகியிருக்கிறது?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி: குறிப்பிட்ட ஒரு கட்சிக்காரர் களுக்கு மட்டும் சொந்தம் என்கிற நிலையிலிருந்து அது மற்றவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்ட நிலைக்கு மாறி, நாட்டு மக்கள் அத்தனைபேரும் நாட்டங்கொண்டு தங்கள் மேலான ஒத்துழைப்பைக் கொடுத்ததன் மூலம் தான் இந்த விற்பனை அதிகமாகியது.

[1969 மார்ச் 17

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பத்தினர், இதில் குடும்பம் பூராவுமே அலைந்தாலும் ஒரு மாதத்திற்கு 60 ரூபாய், 70 ரூபாய்க்கு மேல் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, அதை அதிகப்படுத்த அரசு ஏதாவது முயற்சி செய்யுமா? அல்லது வேறு ஏதாவது மார்க்கம் கொடுத்து, அதாவது ராட்டைகளை அதிகப்படுத்தி, அல்லது வேறு விஞ்ஞான பூர்வமான நிலையில் அவர்களுக்கு ஏதாவது செய்து கூலி உயர்வு கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி: கிராமப் பகுதிகளில் வேளாண்மை போன்ற மற்றத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் தங்கள் ஓய்வு நேரங்களிலே இந்த மாதிரியான தொழில்களைச் செய்து கூடுதல் வருமானமாகக் கிடைப்பதற்காக இது அமைக்கப்பட்டது. ஆகவே, மாதம் பூராவுக்கும் இவ்வளவுதான் ஊதியம் வருகிறது என்று அந்தக் கணக்கை எடுப்பது ஒத்து வராது. இரண்டாவதாகச் சுட்டிக்காட்டிய ராட்டைகளை அதிகமாக உற்பத்தி செய்யும் முறையில் 'டெக்ஸ்டூல் ராட்டை'களைப் பயன்படுத்தினால் ஒரு மடங்குக்கு இரு மடங்காக வரும். ஏற்கெனவே, 1 ரூபாய் பெற்றுக்கொண்டிருந்தால் இதன் மூலம் 2 ரூபாய் கிடைக்கும். ஆனால், டெக்ஸ்டூல் ராட்டைகள் கிடைப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. விரைவாக எல்லாப் பகுதிகளும் பயன்படுத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, கதர் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களிடம், கூலியில் ஒரு பகுதியைப் பிடித்தம் செய்து, வருஷக் கடைசியில் அந்தத் தொகை அவ்வளவுக்கும் கதராகவே வாங்கிக் கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கதரை நூற்று, கதரை நெசவு செய்து விற்பனை செய்கிறவர்கள் கதரை அணிந்துகொண்டால்தான் மற்றவர்கள் அதன்மேல் நம்பிக்கை வைப்பார்கள். அதனால் அவர்கள் அதை அணிய வேண்டுமென்று வேண்டுகோள்கள் விடப்படுகின்றன. அவ்வளவு தொகைக்கும் கதர் வேண்டுமென்பதில்லை. இருக்கிற நெசவாளர்கள் அந்தத் தொகை முழுவதற்கும் கதராகவே வாங்கி வேறு இடங்களிலே விற்று அந்தப் பணத்தைக் கொண்டு செலவழிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆண்டு முழுவதற்கும் கடைசியாக போனஸ் கிடைக்கிறது. நடுவிலே வேண்டுமென்றால் அந்தக் கணக்கிலே எடுத்துக் கொண்டு சரிக்கட்டுகிறார்களே தவிர இது கட்டாயப்படுத்தப்படுவதில்லை.

திரு. ஆர். கருப்பையா: தலைவரவர்களே, முன்பெல்லாம் தீபாவளி, பொங்கல் சமயத்தில் கதர் விற்கப்படும்பொழுது ரூபாய்க்கு 20 பைசா ரிபேட் கொடுத்தார்கள். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் ரூபாய்க்கு 10 காசு தான் ரிபேட் கொடுக்கிறார்கள். ஆனாலும் விற்பனை பாதிக்கப் படவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்லலாம். ஆனால் 20 பைசா கொடுத்தால் இன்னும் அதிகமாக கதரை வாங்கி அணிய விரும்பு வார்கள். இனிமேலாவது அப்படிச் செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதற்கான தகவல் இல்லை. அப்படியே செய்வதாகயிருந்தாலும், மத்திய ஆணைக் குழுவின் கட்டளை இருக்கின்றன, அதற்கு அடங்கி செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்களில் பணிபுரிவோர்

*364 **வினா—திரு. நா. காசிராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்துக்கள், நகரசபைகள் இவைகளின்கீழ் பணிபுரியும் ஊழியர் களின் சம்பள விகிதங்களை **(pay scales)** அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கு உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையி லுள்ளதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இல்லை.